**கவனிக்க.**- *2015.04.24 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1913 - 2015 අප්‍රේල් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.04.30**

*1913 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 224 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 224 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - | | |


**கவனிக்க.**-உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் மற்றும் அரசியலமைப்புக்கான இருபத்திமூன்றாவது திருத்தச் சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 87*

**இலங்கை கடற்படை - நிரந்தர கடற்படை**

வகுப்புக்கு இடையில் மாற்றுதல்

*கீழ் காணப்படும் பெயருடைய அதிகாரி 2015, மாச்சு மாதம் 14 ஆந் திகதியிலிருந்து தரத்தில் மாற்றம் இன்றி தற்போது ஒழுங்கு பாதுகாப்பு வகுப்புக்கு மாற்றுவதற்கு அவரது பெயர் தரம் இலக்கம் அனைத்தும் கீழ் காணப்பட்டவாறு அமைய.-*

**கடற்படை அதிகாரி வகுப்பில் இருந்து**

*லெப்டினன்ட் (விஆ) ஹேல் கும்புரே கெதர துசார பியந்த குமார, என்ஆர்ஆர் 2671, இகப*

*லெப்டினன்ட் (விஆ) ஜயசூரிய ஆராச்சிலாகே தாரக கிஹான் ஜயசூரிய, என்ஆர்ஆர் 2497, இகப*

**அதிகார வகுப்பில் இருந்து**

*லெப்டினன்ட் (விஆ) கொதலாவல லியனகே சம்பத் குமார, என்ஆர்ஆர் 2661, இகப*

*எஸ்ஏஎம்ஜே பெரேரா,*
*ஆர்டப்பீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ,*
*வயிஸ் அட்மிரால்,*
*கடற்படை தளபதி.*

கொழும்பு.

*4-883*

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

*கிளை : நகர கிளை*
*மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*

*ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு மாச்சு 06 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.*

*"மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், கஹந்த கமகே தயா சாந்த கஹந்தசுமித்ர கருணாரட்ன அடகு வைத்தவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. சார்பில் முதலாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ள இத்துடனான ஆதனம், அத்துடன் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான வழி உரிமையுடனான, அடகு ஆதனம், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். எம். சி. பீ. வெத்தசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, நவெம்பர் 28 ஆந்திகதியிடப்பட்ட 2108 மற்றும் 2005, திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்ட 2593 ஆகிய இரு இலக்க முறிகள் பிரசித்தி நொத்தாரிசு எம். பீ. எம். மொஹோட்டியினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, சனவரி 08 ஆந் திகதியிடப்பட்ட 3284 ஆம் இலக்க முறி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, திசெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட 4596 ஆம் இலக்க முறி என்பன மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடனை மீளப் பெறுவதற்காக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.*

*முன் சொல்லப்பட்ட கஹந்த கமகே தயா சாந்த கஹந்தசுமித்ர கருணாரட்ன சொல்லப்பட்ட மாலபே புறப்பெரீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டின் காரியாம்சமான உரிமையாளர் என்பதுடன், முன் சொல்லப்பட்ட மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர் என்பதுடன் முன்சொல்லப்பட்ட கஹந்த கமகே தயா சாந்த கஹந்தசுமித்ர கருணாரட்ன, இயக்குநராக திகழ்வதுடன், அதனை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன் நிர்வகிப்பவராக செயல்படுவதுடன், சகல பொதுவான ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் மற்றும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படும் கொடுக்கல் வாங்கல்கள், கஹந்த கமகே தயாசாந்த கஹந்த சுமித்ர கருணாரட்ன, கடன் வாங்கல் தவணை தவறியமை மற்றும் கடன் பொறுப்புக்களையும் நன்கு அறிந்தவராக திகழ்வதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. இனால் மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட நிதிக் கொடுப்பனவு மூலம் உண்மையிலேயே பயன் அடைபவர்.*

அத்துடன் மாலபே புறப்பெட்டீ டெவலப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் கஹந்த கமகே தயா சாந்த கஹந்தசுமித்ர கருணாரட்ன ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு மேலதிக பற்றாக ரூபா 7,67,65,139.64 மற்றும் கடன் வழங்கல் அடிப்படையாக ரூபா 3,40,24,001.65 என்பவற்றைக் கொண்ட மொத்தத் தொகையான ரூபா 11,07,89,141.29, அத்துடன் 2014, ஒற்றோபர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக பதினொரு கோடியே ஏழு இலட்சத்து எண்பத் தொன்பதாயிரத்து நூற்று நாற்பத்தொரு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூ. 11,07,89,141.29) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2108, 2593, 3284 மற்றும் 4596 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 11,07,89,141.29 ரூபா பணத்தொகையை, 2014, ஒற்றோபர் 31 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப் பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.".

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபைக்கு உட்பட்ட கொள்ளுப்பிட்டி சேர் ஏணஸ் டீ சில்வா மாவத்தை, 11 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள லுலுவேர்த் மற்றும் ஒலிம்பஸ் என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எல். மக்கினால் தயாரிக்கப்பட்ட 1950, ஓகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட 131 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஆனந்தகிரி பிளவர் வீதி ; கிழக்கு : பொது வீதி ; தெற்கு : பிளவர் வீதி, 17 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள ஆதனம் ; மேற்கு: காணித்துண்டு பி, அத்துடன் சொல்லப்பட்ட 131 இலக்க வரைபடத்திற்கு அமைவான முப்பத்தாறு தசம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 36.04பே.) விஸ்தீரணமான காணி, கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ856/ 286 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது. (A856/ 286)

**இரண்டாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் மாநகர சபைக்கு உட்பட்ட கொள்ளுப்பிட்டியில் உள்ள லுலுவேர்த் மற்றும் ஒலிம்பஸ் என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். மக்கினால் தயரிக்கப்பட்ட 1950, ஓகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட 131 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு சி (வீதிக்கான ஒதுக்கீடு) என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஆனந்தகிரி பிளவர் வீதி ; கிழக்கு : காணித்துண்டு ஏ (A) ; தெற்கு : காணித்துண்டு பி (B) ; மேற்கு: பிளவர் வீதி. அத்துடன் சொல்லப்பட்ட 131 இலக்க வரைபடத்திற்கு அமைவான நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 4பே.) விஸ்தீரணமான காணி. கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ856/243 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது. (A856/ 243)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி.ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) / சபைச் செயலாளர்.

4- 892

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.